தமிழ் நாடு தகவல் ஆணையம்
காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 24476 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.</u>**

| | |
|---|---|
| **முன்னிலை :** | **திரு. தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,<br>மாநில தகவல் ஆணையர்** |
| **மனுதாரர் :** | **திரு. கே. கிருஷ்ணன்,<br>மக்கள் மையம்,<br>1/151, மெயின் ரோடு,<br>பாகசாலை,<br>சீர்காழி வட்டம்,<br>நாகை மாவட்டம் – 609 117.** |
| **பொது அதிகார அமைப்பு :** | **பொதுத் தகவல் அலுவலர்,<br>மாவட்ட சமூக நல அலுவலர் அலுவலகம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>நாகப்பட்டினம்.** |

-------

மனுதாரர் திரு. கே. கிருஷ்ணன் மற்றும் திருமதி. கே. அன்பழகி, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட சமூக நல அலுவலர், சமூக நலத் துறை, நாகப்பட்டினம் இவ்வாணையத்தில் இன்று (27.01.2010) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 03.07.09 அன்று 4 இனங்களில் ஒரு குறிப்பிட்ட திருமண உதவித் திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட நபருக்கு வழங்கப்பட்டது குறித்து தகவல் கேட்டு மனு செய்துள்ளார். மனுதாரருக்கு தகவல் கிடைக்காததால் 09.08.09 அன்று மேல்முறையீடு செய்துள்ளார். இவ்வாணையத்திற்கு 24.09.09 அன்று மேல்முறையீடு செய்த மனு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் 25.07.09 அன்று தகவல்கள் தரப்பட்டதாகவும், கொடுக்கப்பட்ட தகவல்கள் முழுமையாக இல்லை என்றும் தெரிவித்தார். இனம் 1–க்கு தகவல் தரப்பட்டதாகவும், இனம் 2, 3 மற்றும் 4–க்கு தகவல் தரப்படவில்லை என்றும் தெரிவித்தார். இனம் 3–ல் மனுதாரர் குறிப்பிட்டு சான்று சரியானதா? இல்லையா? என்று தெளிவான விளக்கம் தெரிவிக்குமாறு கேட்டுள்ளார். மனுதாரர் கேட்டுள்ள தகவல் அலுவலகக் கோப்புகளில் இருப்பது குறித்து விசாரணையின் போது கோப்புகள் பார்வையிடப்பட்டது. மனுதாரர் கேட்டுள்ள தகவல்கள் தகவலாக கோப்பில் இல்லாவிட்டாலும், குறிப்பிட்ட நபர் மனு செய்த நாள், பெறப்பட்ட விவரம் கோப்புகளில் இருப்பதால் அவ்விவரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்படுகிறது. மனுதாரருக்கு வேறு ஒரு மனுவிற்கு குறிப்பிட்ட நபர் அனுப்பிய விண்ணப்பத்தின் நகல் அனுப்பப்பட்டதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார். மனுதாரர் கேட்டுள்ள விவரங்கள் விசாரணையின் போது ஆவணங்களை பார்வையிட்டு சம்பந்தப்பட்ட நகல்கள் மனுதாரருக்கு நேரடியாக தரப்பட்டதால் இவ்வழக்கு இத்துடன் முடிவு செய்யப்படுகிறது.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 01.02.2010 தமிழ்நாடு தகவல் ஆணையம்
ஆணையத்தின் ஆணைப்படி

( சு. மோகன தாஸ் )
உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். 24476/09</u>

பெறுநர்

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட சமூக நல அலுவலர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
நாகப்பட்டினம்.

திரு. கே. கிருஷ்ணன்,
மக்கள் மையம்,
1/151, மெயின் ரோடு,
பாகசாலை,
சீர்காழி வட்டம்,
நாகை மாவட்டம் – 609 117.